வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 02.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை டெல்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.
- தேசிய விளையாட்டு விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- மின்னணு வர்த்தகத்திலும் சிறு வணிகர்கள் அதிகாரம் பெறுவதிலும் ஓஎன்டிசி இணையதளம் பெரும் பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் 3 நாட்கள் நடைபெறும் மண்டல அறிவியல் கண்காட்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

<u>மோடி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை டெல்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார். அசோக் விகாரில் உள்ள ஸ்வாபிமான் அடுக்குமாடி குடியிருப்பில் பொருளாதாரத்தில் நலவடைந்த பிரிவினருக்காக புதிதாக கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 675 அடுக்குமாடி குடியிருப்புகளை பயனாளிகளுக்கு பிரதமர் நாளை வழங்க உள்ளார். 300 கோடி ரூபாய் மதிப்பிலான மத்திய கல்வி வாரியத்தின் ஒருங்கிணைந்த கட்டட வளாகத்தை திறந்து வைக்கும் பிரதமர் டெல்லி பல்கலைக் கழகத்தின் 600 கோடி ரூபாய் மதிப்பிலான 3 புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.

**_விளையாட்டு வீரர்கள்_**

தேசிய விளையாட்டு விருதுகள் இன்று அறிவிக்கப்பட்டுள்ளன. உலக செஸ் சாம்பியன் டி குகேஷ், பாரீஸ் ஒலிம்பிக்கில் இரட்டை பதக்கம் வென்ற மனு பாக்கர் இந்திய ஹாக்கி அணி கேப்டன் ஹர்மன்பிரீத் சிங் மற்றும் பாரீஸ் பாரா லிம்பிக்கில் தங்க பதக்கம் வென்ற பிரவீன்குமார் ஆகியோருக்கு மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தடகள வீராங்கனைகள் ஜோதி எர்ராஜ், மற்றும் அன்னூ ராணி, குத்துச் சண்டை வீராங்கனைகள் நிது மற்றும் சாவீட்டி, செஸ் வீராங்கனை வந்திகா அகர்வால் உள்ளிட்ட 32 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மூத்த தடகள வீரர் சுச்சா சிங் மற்றும் மூத்த பாரா நீச்சல் வீரர் முரளிகாந்த் பெத்கர் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனைக்கான அர்ஜுனா விருது வழங்கப்படுகிறது. மேலும் பல்வேறு பிரிவுகளில் வீரர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இம்மாதம் 17-ஆம் தேதி ராஷ்டிரபதி பவனில் நடைபெறும் விழாவில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு இவ்விருதுகளை வழங்க உள்ளார்.

**_ஓஎன்டிசி_**

மின்னணு வர்த்தகத்தை பிரபலமாக்கியதுடன் சிறு வணிகர்கள் அதிகாரம் பெறுவதிலும் ஓஎன்டிசி இணையதளம் பெரும் பங்கு வகித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இது வளர்ச்சி மற்றும் செழிப்பை மேலும் அதிகரிப்பது முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், பிரதமர் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். இந்தியாவில் டிஜிட்டல் வர்த்தகத்தை ஜனநாயகமயமாக்கும் வகையில் அறிமுகம் செய்யப்பட்ட ஓஎன்டிசி இணையதளம் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகள் நினைவடைந்ததை ஒட்டி மத்திய வர்த்தக துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவை மேற்கோள்காட்டி பிரதமர்

இவ்வாறு தெரிவித்துள்ளார். திரு பியூஷ்கோயல் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில் கடந்த 3 ஆண்டுகளில் ஓஎன்டிசி இணைய தளம் பல மைல் கற்களை அடைந்துள்ளது என்றும் வணிகங்களுக்கு குறிப்பாக சிறு நிறுவனங்களுக்கு இ.காமர்ஸ் தளத்தில் சம வாய்ப்பை ஏற்படுத்தியதன் மூலம் அதிகாரம் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். விற்பனையாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் இடையேயான இடைவெளியை குறைப்பதன் மூலம் இந்த இணையதளம் நாட்டின் இ.காமர்ஸ் தளத்தில் தொடர்ந்து புரட்சியை ஏற்படுத்தி வருவதாகவும் திரு பியூஷ்கோயல் குறிப்பிட்டுள்ளார்.

***<u>பிரத□ர்-□காராஷ்டிரா</u>***

மகாராஷ்டிராவில் மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளை முன்னெடுக்கும் அம்மாநில அரசின் முயற்சிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். இதுகுறித்து தமது சமூக ஊடகப் பதிவில் இந்த முயற்சி உறுதியாக அப்பகுதி மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் என்றும் முன்னேற்றத்திற்கான வழிகளை மேம்படுத்தும் என்றும், பிரதமர் தெரிவித்துள்ளார். மாவோயிஸ்ட்டுக்களால் பாதிக்கப்பட்ட கட்சிரோலி மற்றும் அதனை சார்ந்த பகுதி மக்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி சிறப்பு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். கட்சிரோலியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியின் போது மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீஸ் முன்னிலையில் 11 நக்சலைட்டுகள் சரண் அடைந்தனர். அப்போது உரையாற்றிய திரு பட்நவிஸ், ஆயுதங்களை ஒப்படைத்து சரண் அடையும் மாவோயிஸ்ட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும், இந்த இயக்கத்தில் ஆட்கள் சேர்வது தடுக்கப்பட்டிருப்பதன் மூலமும், மாவோயிஸ்ட்டுக்களின் அச்சுறுத்தலில் இருந்து மகாராஷ்டிரா விரைவில் விடுபடும் எனவும் கூறினார்.

## □கா கும்ப□ளா

மகா கும்பமேளா நடைபெறுவதை முன்னிட்டு உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள புனித யாத்திரைகளின் ராஜா என்று அழைக்கப்படும் பிரயாக்ராஜில் முன்னேற்பாடுகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இம்மாதம் 13-ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 26-ஆம் தேதி வரை 45 நாட்கள் நடைபெற உள்ள கும்பமேளாவிற்கு மகாகும்ப நகர் என்ற பெயரில் தற்காலிக நகரம் உருவாக்கப்பட்டு பக்தர்கள் தங்குவதற்கான குடில்கள் மற்றும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மகா கும்பமேளாவின் போது தேவையான தகவல்களை தெரிந்து கொள்ளும் வகையில் சிறப்பு செயலி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட வழிகாட்டு பலகைகளும் அமைக்கப்பட்டுள்ளன. கும்பமேளாவில் கலந்து கொள்பவர்கள் ஆற்றில் குளிக்கும் போது அசம்பாவிதங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் ட்ரோன்கள் மூலம் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வேலை வாய்ப்பு

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் வேலை வாய்ப்பை உருவாக்குவது குறிப்பிடத் தக்க வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 2014 முதல் 2024-ஆம் ஆண்டு வரை 17 கோடிக்கும் அதிகமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக கடந்த ஆண்டு 4 கோடியே 60 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2014 முதல் 2024-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட 10 ஆண்டுகளில் 36 சதவிகித வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் 2004 முதல் 2014-ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட 7 சதவிகித வளர்ச்சியை விடவும் சிறப்பாக இருந்ததாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசில் வேளாண் துறையில் வேலை வாய்ப்புகள்

19 சதவிகிதமும், உற்பத்தி துறையில் 15 சதவிகிதமும், சேவைத் துறையில் 36 சதவிகிதமும் அதிகரித்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

__*வேலை வாய்ப்பு*__

கடந்த 2017-18-ஆம் ஆண்டு 6 சதவிகிதமாக இருந்த வேலை வாய்ப்பின்மை 2023-24-ஆம் ஆண்டில் 3.2 சதவிதமாக குறைந்துள்ளது என்றும், கடந்த 7 ஆண்டுகளில் 18 முதல் 28 வயதிற்கு உட்பட்ட 4 கோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியான EPFO-வில் இணைந்துள்ளதாகவும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

__*மியான்□ர்*__

இந்தியா தனது மியான்மர் எல்லையில் 9 கிலோமீட்டர் தூரத்திற்கு வேலி அமைக்கும் பணியை முடித்துள்ளது. மணிப்பூரில் உள்ள மோரே என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலியை ஒட்டி ராணுவ வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவதற்காக சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதுகுறித்து உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மியான்மர் எல்லையில் 21 கிலோமீட்டர் தூரத்திற்கு வேலி மற்றும் சாலை அமைக்கும் பணி கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் எல்லை சாலை அமைப்பிற்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோரம் வழியாக மியான்மருடன் ஆயிரத்து 643 கிலோமீட்டர் நீள எல்லையை இந்தியா பகிர்ந்து கொள்ளும் நிலையில் ஆயிரத்து 472 கிலோ மீட்டர் அளவிற்கு எல்லையை வரையறுக்கும் பணி நிறைவடைந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசம், மற்றும் மணிப்பூரில் அதிநவீன கண்காணிப்பு அடிப்படையிலான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***அறிவியல் கண்காட்சி***

புதுச்சேரி அரசின் பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் நடப்பு கல்வியாண்டிற்கான மண்டல அறிவியல் கண்காட்சி ஏம்பலம் பிஎம் ஸ்ரீ மறைமலை அடிகள் அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்று தொடங்கி உள்ளது. இன்று காலை நடைபெற்ற விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, கலந்து கொண்டு பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த அறிவியல் கண்காட்சியை தொடக்கி வைத்து பார்வையிட்டார். சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு லட்சுமி காந்தன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியை பார்வையிட்டனர். 3 நாட்கள் நடைபெறும் இந்த மண்டல அறிவியல் கண்காட்சியில் 383 அறிவியல் மாதிரிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கண்காட்சியில் கல்பாக்கம் இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம், தேசிய புத்தக அறக்கட்டளை, அட்டல் இன்குபேஷன் மையம், புதுச்சேரி சுகாதாரத் துறை மற்றும் காவல்துறை ஆகியவற்றின் சார்பிலும் விழிப்புணர்வு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டல அறிவியல் கண்காட்சி குறித்து இதன் ஒருங்கிணைப்பாளரும் இப்பள்ளியின் துணை முதல்வருமான திரு ராஜகோபால் கூறும் பொழுது....... (வாய்ஸ்)

***காரைக்கால்-□ாணவர்கள்***

காரைக்கால் மாவட்டத்தில் ஒரு நாள்- மாணவர்கள் ஆட்சியர் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 மாணவர்கள் அம்மாவட்ட ஆட்சியர் முனைவர் மணிகண்டன் முன்னிலையில் இன்று பொறுப்பேற்றுக் கொண்டனர். அம்மாணவர்களுக்கு ஆட்சியர் வாழ்த்துக் கூறினார். கடந்த மாதம் காரைக்காலில் நடைபெற்ற மக்களைத் தேடி மாவட்ட ஆட்சியர் நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனுடன் காணொலி மூலம் உரையாடிய சகினா மற்றும்

ஹர்ஷிதா ஆகிய மாணவிகைள நாளை புதுச்சேரியில் துணை நிலை ஆளுநரை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆட்சியர் தெரிவித்தார். இதற்கிடையே, காரைக்கால் மாவட்டம் சார்பில் மாதந்தோறும் நடத்தப்படும் மக்களைத் தேடி மாவட்ட ஆட்சியர் நிகழ்ச்சி திருப்பட்டிணம் தொகுதிக்கு உட்பட்ட நடுக்களம் பேட் அங்கன்வாடி மையத்தில் இன்று நடைபெற்றது. இதில் ஒருநாள் மாவட்ட ஆட்சியராக தேர்ந்தெடுக்கப்பட்ட 4 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சியர் மக்களிடம் குறைகளை கேட்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு திறன் சார்ந்த அறிவுரைகளும், சுய வேலை வாய்ப்புக்கான கடன் உதவிகள் குறித்த ஆலோசனைகளும் இந்நிகழ்ச்சியின் மூலம் தரப்படுவதாக தெரிவித்தார்.

<u>நாஜீம்</u>

காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட வள்ளல் சீதக்காதி வீதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்காவை சட்டமன்ற உறுப்பினர் திரு ஏஎம்எச் நாஜீம் இன்று திறந்து வைத்தார்.

<u>கேரள ஆளுநர்</u>

கேரள ஆளுநராக திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். திருவனந்தபுரத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு நிதின் ஜம்தார் அவருக்கு பதவிப் பிரமானம் செய்து வைத்தார். இதற்கு முன் கேரள ஆளுநராக இருந்த திரு ஆரிப் முகமதுகான், பீகார் ஆளுநராக இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

***மின்னணு-விருது***

தேசிய மின்னணு ஆளுகை விருதுகளுக்கான விண்ணப்பங்களை வரவேற்பதாக மத்திய நிர்வாக சீர்திருத்தத் துறை தெரிவித்துள்ளது. இந்த விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15-ஆம் தேதிக்குள் NCEG.Gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைய பாதுகாப்பில் சிறந்த மின்னணு ஆளுகை நடைமுறைகள், டிஜிட்டல் தளங்களில் தரவு பகுப்பாய்வை பயன்படுத்தி டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்கலாம் என்று மத்திய நிர்வாக சீர்திருத்த துறை தெரிவித்துள்ளது.

***பனிமூட்டம்***

வடமாநிலங்களில் நிலவும் கடும் பனிமூட்டம் காரணமாக ரயில்கள் குறைவான வேகத்தில் இயக்கப்படுகின்றன. இதன் காரணமாக டெல்லிக்கு வரவேண்டிய ரயில்கள் ஏறக்குறைய 5 மணி நேரம் தாமதமாக வருவதாக இந்திய ரயில்வே அறிவித்துள்ளது. இதற்கிடையே, பஞ்சாப், அரியானா, சண்டிகர், மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் இன்றும் நாளையும், கடும் குளிருடன் பனிமூட்டம் நிலவக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***வானிலை***

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக அடுத்த 2 நாட்களுக்கு தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>**

**பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை டெல்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடக்கி வைப்பதோடு, புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்ட உள்ளார்.**